பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 73 பிரமோதூத தை 26
(08 - 02 - 1991) வெள்ளி

## சீனாவிலிருந்து ஆயுதங்கள் இராணுவத்துக்கு வருகின்றன

இவ்வருட இறுதிக்குள் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் ஆட்பலம் 120,000 ஆக இருக்கும் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. இராணுவம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்படும் ஒவ்வொரு பிரிவும் மூன்று பிரிகேட்டுகளையும் மூன்று பட்டாலியன்களையும் கொண்டிருக்கும். இவற்றுள் தனியான இரு விசேட படைப் பிரிவுகள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு சீனத்தயா ...04 ஆம் பக்கம் பார்க்க

# மணலாறு அரண் மீது விடுதலைப் புலிகள் தாக்கு!

## ஏழு படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

**மணலாறு மாவட்டத்திலுள்ள சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கும் முந்திரிகைக்குளம் முகாமிற்கும் இடையே அமைந்துள்ள காவல் அரண் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.**

இத்தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மூவர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

இவ்வாறு தாக்குதல் நடந்து கொண்டிருந்த வேளை இரு முகாம்களிலிருந்தும் படையினர் முன்னேறி வந்துகொண்டிருந்தனர். இவர்கள் மீதும் புலிகள் இடைமறித்துத் தாக்குதல் நடத்தினர். பலத்த சேதங்களுடன் படையினர் பின்வாங்கி முகாம் திரும்பினர்.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விவரம்: ரி 81 எல், எம், ஜீ-1, மகசின் 4, ரி 81-1, மகசின் 4, ரி-56-5, மகசின் - 13, எஸ். எல். ஆர்-1 மகசீன்-4, 303 ரைபிள்-4. மகசீன்-4, ரி. 81 ரைபிள் கிரனைட்-10, டப்பி மைன்ட்ஸ்-15, 303 ரவை. 223, நோட்டே ரவை.30 ஐ. எம். ரவை-710, 303 சார்ஜர் கிளிப் 45. (71)

## திரியாய் முகாம் மீது புலிகள் கடும் ஷெல் தாக்குதல்

திருகோணமலை மாவட்டம் திரியாய் இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் இரவு புலிகள் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினமிரவு பத்து மணியளவில் முகாம் நோக்கி புலிகள் கடுமையான முறையில் ஷெல் தாக்குதலை நடாத்தினர். முகாமில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. (71)

### பி. பி. ஸியில் மாத்தயா

## யுத்தத்தில் மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கமுடியாதது என்கிறார் ரஞ்சன்

வடக்கு, கிழக்குப்பகுதியில் நடைபெறும் யுத்தத்தின் போது பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்று பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விமானத் தாக்குதல்களின் —04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்காவின் இனப்படுகொலைக்கு மனிதாபிமான உலகின் நிலைப்பாடு என்ன?

அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்களை கொன்று இப்போது தமிழ் மக்களை வருத்தி வரும் ஸ்ரீ லங்கா அரசு தொடர்பாக மனிதாபிமான உலக நாடுகள் என்ன செய்யப்போகின்றன என்பதைத்தான் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம். ...04 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலியில் இருந்து கிரனைட் வீச்சு கணவனும் மனைவியும் படுகாயம்

நேற்றுமாலை 7 மணியளவில் யாழ் நகரப்பகுதி உட்பட நாவற்குழி, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு, அரியாலை, முத்திரைச்சந்தை ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டரில் இருந்து கிரனைட் வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்தப்பட்டன.

கல்வியங்காடு இராச வீதியிலுள்ள கதிரவேலு சின்னத்துரை என்பவரின் வீட்டில் விழுந்த கிரனைட் வெடித்ததால் அவரும், அவரது —04 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை மக்கள் மண் மீட்பு நிதி செலுத்தச் சந்தர்ப்பம்

நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 10-ம் திகதியும், கரவெட்டி பிரிவைச் சேர்ந்தோர் 16-ம் —04 ஆம் பக்கம் பார்க்க

## காடுகளின் விவரங்கள் இராணுவத்துக்கு விளக்கம்

தமிழ் குழுவொன்றின் முக்கியஸ்தர் ஒருவர் வவுனியா மாவட்ட காடுகளின் விவரங்களை ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கி வருகிறாராம்.

வடபகுதி இராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவாவுடன் இவர் வன்னிமாநில புவியியல் நிலைகுறித்து விளக்கமளித்துள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

## போக்குவரத்துச்சபை ஊழியர் கண்டன ஊர்வலம்

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் தலைமை அலுவலகம், கோண்டாவில் சாலை என்பனவற்றின் மீது குண்டு வீச்சு விமானம் மேற்கொண்ட தாக்குதல், இந்த ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக வேதனம் வழங்கப்படாமை என்பவற்றை ஆட்சேபித்தும் நேற்று போக்குவரத்து சபை ஊழியர்கள் கண்டன ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

கோண்டாவிலில் ஆரம்பமான இவ்வூர்வலம் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் கச்சேரி ஆகிய இடங்களுக்கு சென்று மகஜர் கையளிக்கப்பட்டது. (74, 33. 12, ப-11)

## நெல்லியடி வாசிகளுக்கு வவுனியாவில் சூடு

வவுனியாவில் 3ஆம் திகதி ஹெலி கப்டர் சூட்டில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நெல்லியடியைச் சேர்ந்த திருமதி சிவகாசிப்பிள்ளை(55) என்ற பெண்மணியும் குலம் (40) என்பவரும் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (88)

## தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சியில் ஆரம்பம்

ஆறு மாதங்களாகச் செயலற்று இருந்த- இயங்கமுடியாதிருந்த தேசிய சேமிப்பு வங்கி இம்மாதம் 11-ம் திகதி திங்கட்கிழமை முதல் கிளிநொச்சி கச்சேரிக்கு முன்பாக புதிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பொது முகாமையாளர் திரு. து.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார் (ப 6)

## மண்டைதீவு, அல்லைப்பிட்டி தபால் சேவை

பண்ணை மண்டைதீவு படகுச் சேவையைத் தொடர்ந்து மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிகளுக்கான தபால் சேவையும் சீரடைந்துள்ளது. நேற்றிலிருந்து இப்பகுதி தபால் விநியோகம் வழமைபோல் நடைபெறுகிறது. 33

## கிளிநொச்சிக்கு லொறிகளில் உணவுப்பொருள்கள் வந்தன

கிளிநொச்சிக்கான உணவுப்பொருள்களுடன் தரைமார்க்கமாக இருபத்தொரு லொறிகள் வந்தடைந்தன.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பசுபதிப்பிள்ளை
ரவீந்திரநாதன் (ரவி)
(கூட்டுறவுச் சங்க ஊழியர்)

அன்னைமடியில் ஆண்டவன்அடியில்
03 - 03 - 64 21 - 01 - 90

திதி: 08. 02. 91

அன்பிலே சிறந்து பழகும் பண்பிலே உயர்ந்து
அறிவுடைய நம்பியாகக் குடும்பத்தில் விளங்கி
தந்தை, தாய் மெச்சிடும் வண்ணம் வாழ்ந்த ரவி
தரணியில் மறைந்து ஆண்டொன்று கழிந்த தம்மா
என்றும் உம் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், உறவினர், நண்பர்கள்.

இல. 47, உருத்திரபுரம் கிழக்கு,
உருத்திரபுரம். 02044

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 13 | | 27 |
| — | | — |
| 11 |  | 12 |
| — | | — |
| 18 | | 90 |

அருணாசலம்
குழந்தைவடிவேல் (அப்புஅண்ணா)
வேல் ஸ்ருடியே, A. K. பிரதர்ஸ்
(உரிமையாளர்)

திதி 09 - 02 - 91

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 09 . 02 . 1991, அன்று எமதில்லத்தில் நடைபெறவுள்ளது அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை
திலகராஜா (வினோத்) வீதி,
காட்டுவளவு, வல்வெட்டித்துறை. 02055

# பொரளை மத்திய ஆயுர்வேத வைத்தியசாலையில்

## யாழ் சித்தமருத்துவ மாணவருக்குப் பயிற்சி வழங்க மறுப்பு!

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்குப் பொரளையில் உள்ள மத்திய ஆயுர்வேத மருத்துவமனையில் இன்ரேர்ன்சிப் - உள்ளகப்பயிற்சிகளை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

யாழ் சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு இதுவரை ஆறு மாதகால உள்ளகப் பயிற்சி பொரளை மத்திய ஆயுர்வேத மருத்துவமனையிலேயே வழங்கப்பட்டு வந்தது.

சித்த மருத்துவத்துறையில் கல்வி பயிலும் இம் மாணவர்கள் ஜுனானி மற்றும் ஆயுர்வேத வைத்தியத் துறைகளிலும் செய்முறைப் பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே சுதேச வைத்தியசாலைகள் அமைச்சினால் இந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.

இத்திட்டத்தின்கீழ் சில வாரங்களுக்குமுன் பொரளையில் உள்ளகப்பயிற்சி பெறச் சென்ற யாழ் சித்த மருத்துவத்துறை மாணவர்களுள் ஒரு தொகுதியினருக்கு அங்கு உள்ளகப்பயிற்சி வழங்க அவ் வைத்தியசாலையின் நிர்வாகம் அனுமதி மறுத்துவிட்டதாம்.

ஆயுர்வேத, ஜுனானி துறைகளில் பயிற்சிபெற்ற சிங்கள, முஸ்லிம் வைத்தியர்கள் யாழ்ப்பாணத்தில் கடமை புரிய முடியாது. இதனால் இந்த மருத்துவத்துறையில் பயின்ற தமிழ் மாணவர்களை இங்கு உள்ளகப்பயிற்சிபெற அனுமதிக்க முடியாது என அங்கு தெரிவிக்கப்பட்டதாம்.

இதுபற்றி ஆயுர்வேதத் திணைக்கள ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டும் பயன் ஏதும் ஏற்படாத நிலையில் உள்ளகப் பயிற்சிக்கென கொழும்பு சென்ற யாழ் மாணவர்கள் பயிற்சியைப் பெறாது இங்கு திரும்பி வந்துள்ளனர். (74)

## நூலகவியலாளர் கற்கைநெறி

ஸ்ரீலங்கா நூலகவியலாளர் சங்கத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் கற்கைநெறி கடந்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பமாகி ஒரு மாதம் மட்டுமே நடைபெற்றது.

விரிவுரையாளர்கள் சமூகமளிக்காததும் யூன் மாதம் ஆரம்பமான பிரச்சினைகளாலும் தொடர்ந்து மாணவர்கள் தமது கற்கைநெறியை தொடர முடியாது திண்டாடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக் கற்கைநெறியை முடித்துப் பரீட்சையை நடாத்தி பெறுபேறுகள் வெளியாகியிருந்தால், தற்சமயம் அமைய அடிப்படையில் அரச, உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றும் நூலக உதவியாளர்கள் நிரந்தர அந்தஸ்தைப் பெற்றிருப்பர் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ப-1)

ஓம்
விராட்விஸ்வ பிரம்மனே நம

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சரவணமுத்து சிவககொழுந்து
(ஆச்சாரியார்)

தோற்றம்: 13. 06. 1920 மறைவு: 21. 01. 1990

திதி: 08-02-1991

எங்கள் மனக்கோயிலில் குடிபுகுந்து விட்டதெய்வமே மாறாத் துயிலாகி மறையாக் கவலை தந்து மறைந்து விட்ட தந்தையே! அன்பின் உருவமாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மையெல்லாம் வழி நடத்திச் சென்ற இனிய தலைவரே! கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம் காத்தீரே! நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவு இருக்கும். உடலும் உயிரும் இருக்கும் வரை உங்கள் பாசம் எம்மை வழி நடத்தும். காலத்தின் கோலத்தால் காலன் உம்மை அழைத்து ஒரு வருடமாகியது. ஆனாலும் உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலாது.

பிரிவால் வருந்தும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

02054

# மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினர்கள்

# யாழ் வருவதற்கு வவுனியாவில் இராணுவம் தடை!

யாழ் குடா நாட்டுக்கு வருவதற்கு வெளி நாட்டவர்களுக்கு மட்டுமன்றி உள்நாட்டவர்களுக்கும் தற்போது ஸ்ரீலங்கா படையினால் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழ் குடாவை நோக்கி வாகனமொன்றில் வந்து கொண்டிருந்த ஆறு கிறிஸ்தவ குருமார்கள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பல மணி நேரமாக இந்தக் குருமார் இராணுவ அதிகாரிகளுடன் வாதாடியும் அவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கான அனுமதி அங்கு வழங்கப்படவில்லை- இறுதியில் இவர்கள் அறுவரும் இராணுவத்தினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு வவுனியாவில் வைத்துக் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த கிறிஸ்தவ குருமார் மனித உரிமையுடன் சம்பந்தப்பட்ட அமைப்பொன்றின் பிரதிநிதிகள் எனவும், யாழ் குடாவின் நிலையை அவதானித்து அதுபற்றிய உண்மை நிலை அறிக்கையொன்றைத் தயாரிக்கவே அவர்கள் இங்கு வர முயன்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-11)

## 'மனிததன்மைக்குவழங்கவேண்டியமதிப்பை நச்சு ஆயுதம் குறைத்து விடும்' -பாப்பரசர்

இரசாயன மற்றும் நுண்ணுயிர்க் கிருமி ஆயுதங்களை யுத்தத்தில் பயன்படுத்த ஒரு போதும் அனுமதிக்கக் கூடாதென பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வத்திக்கானில் வாராந்த பொது தரிசன வைபவத்தில் அருளுரை நிகழ்த்து கையிலேயே பரிசுத்த பாப்பரசர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மனிதத்தன்மைக்குவழங்கப் பட வேண்டிய மதிப்பை இந்த நடவடிக்கை முற்றாகவே இல்லாமல் செய்து விடும் எனவும் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார். (16)

## திருமலையில் இராணுவ சிப்பாய் சுட்டதில்

## சக சிப்பாய் பலி; மேலும் மூவர்படுகாயம்

திருகோணமலையில் ஸ்ரீலங்கா இராணுவ சிப்பாய் ஒருவர் திடீரென மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சக சிப்பாய் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மேலும் மூன்று சிப்பாய்கள் படுகாயமுற்றனர். கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சிப்பாய் திடீரென ஏன் இவ்வாறு நடந்து கொண்டார் என எதுவும் அறிய முடியாதுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுட்ட சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார் இறந்தவரின் இறுதிக் கிரியைகள் இராணுவ மரியாதையுடன் இடம் பெற்றன காயமடைந்தவர்கள் சிகிச்சைக்குக் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.


## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

MILK WHITE LIQUID SOAP
All Purpose Dirt Remover

துரித சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றுவதில் தனிச் சக்தி வாய்ந்தது.

சாதாரண வீட்டுச் சலவைக்குப்

### பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

02051


## இந்திய ராணுவத்தில் பெண்கள்!

இந்திய இராணுவத்தில் பெண்களையும் சேர்த்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தளபதி ரோத்ரிடஸ் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு விசேட பயிற்சி வழங்கவெனப் பல பயிற்சி முகாம்கள் அமைக்கப் படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

## ஐ. நா. செயலர் பதவி விலகுகிறார்!

ஐ நா பொதுச்செயலராகப் பதவியில் இருக்கும் பெரோஸ் டி-கொல்யரின் பதவிக்காலம் 1991 ஆம் ஆண்டு இறுதியில் முடிகிறது.

1982ஆம் ஆண்டு ஜனவரி முதல் அவர் இப்பதவியில் இருந்து வருகிறார்.

தான் மீண்டும் போட்டியிட விரும்பவில்லையெனவும் ஓய்வு பெற விரும்புவதாகவும் கொல்யார் அறிவித்திருக்கிறார். உலகின் பெருமைக்குரிய பதவிகளில் ஒன்றாகக் கருதப்படும் ஐ. நா பொதுச் செயலர் பதவிக்கு மாதச்சம்பளம் கிட்டத்தட்ட ஸ்ரீ லங்கா ரூபாவில் ஏழு லட்சமாகும்.

## உங்களுக்கு உரியதா!

கடந்த 4 ஆம் திகதி கேரதீவு இறங்கு துறையில் கைக்குழந்தை ஒன்றுடன் வந்த பெண் பிரயாணி ஒருவர் தவறவிட்ட பிரயாணப் பை ஒன்றும் மற்றும் சில பொருள்களும், சங்கத்தானையைச் சேர்ந்த சக பிரயாணி ஒருவரினால் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இவற்றை உரியவர் தமது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் செல்வராசா கேட்டுள்ளார். (ப-5)

## சதாமை அரேபியர்மட்டுமல்ல ஐரோப்பியரும் 'மதி'க்கிறார்கள்.

வளைகுடாவின் 'ஹீரோ' எனக் கூறப்படும் ஈராக் அதிபரின் பெயரை அரபு நாட்டு பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டுவதில் போட்டி போடுவதுமுரசொலி வாசகர்கள் அறிந்ததே.

இந்த சதாமுக்கு ஐரோப்பிய நாடுகளில் எவ்வளவு 'மதிப்பு' கொடுக்கப் படுகிறது என்பது பற்றியசெய்தி இது.

ஈராக்மற்றும்அரபுநாடுகளில்சாதமின் வர்ணப்புகைப் படங்கள்வீடுகளில் இருப்பது போல் ஐரோப்பிய நாடுகளிலும் எல்லா வீடுகளிலும் சதாமின் வர்ணப்படங்கள் அடங்கிய காகிதத் துண்டுகள் பெருமளவில் இருக்கின்றன

ஆனால் இந்த வர்ணப்படங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் தான் அரபும்—ஐரோப்பாவும் வேறுபடுகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் வீட்டு மல கூடங்களில் சதாமின் வர்ணப் புகைப் படத்தை தாங்கிய இந்த காகிதச் சுருள்கள் 'பாத்ரூம் பேப்பர்' ஆகவே பயன் படுத்தப்படுகின்றன.

அவ்வளவு 'மரியாதை' அவருக்கு அங்கு.

## செங்கை ஆழியானைப் பாராட்ட...

'எழுதிக் குவிக்கும்' செங்கை ஆழியானைப் பாராட்டி வாழ்த்த நல்லூர் கம்பன் கோட்டத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிறு பி. ப. 3 மணிக்கு கூட்டமொன்று நடைபெறுகிறது. கவிஞர் 'சோ. ப' தலைமை தாங்க, 'நந்தி' 'வரதர்' யாழ் பல்கலைக் கழகப் புவியியல்துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. டிவகலாலா, 'செம்பியன் செல்வன்', கம்பன் கழக ஜெயராஜ், மல்லிகை டொமினிக்ஜீவா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

## தமிழக அகதி முகாம்களில் உளவாளிகள்தொல்லை அதிகரிப்பு

தமிழகத்தின் பல பகுதிகளிலும் உள்ள இலங்கைத்தமிழர் அகதிமுகாம்களில் இந்திய மத்திய புலனாய்வுத்துறையினரின் நடமாட்டமும், நடவடிக்கைகளும் பெருமளவு அதிகரித்துள்ளதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப்புலனாய்வுத்துறையினர் அங்குள்ள அகதிகளைப் பின்தொடர்வதாகவும், அவர்களின் நடவடிக்கைகளைப்பற்றி விசாரணைகளை மேற்கொள்வதாகவும் சொல்லப்படுகின்றது.

இதனால் அகதிமுகாம்களில் தங்கியுள்ள பலர் மீண்டும் தமது தாயகத்திற்குத் திரும்பி விடவிரும்புகின்றனராம். (74)

## நல்லூரில் சுகாதார வாரம்

நல்லூர் பிரதேச சபை கடந்த 3ஆம் திகதி முதல் சுகாதாரவாரத்தை அனுஷ்டித்து வருகின்றது இதனை முன்னிட்டு இப்பகுதியில் பல சுகாதார நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி ஒன்றும் நடாத்தப் படுகின்றது. இச்சித்திரங்கள் இன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல்வேண்டும்.

இதுபற்றிய மேலும் விபரங்களை நல்லூர் பிரதேச அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்படுகின்றது.

# பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகம் மீது ஷெல் தாக்குதல்

# அமெரிக்க ஜனாதிபதிக்கு கொலை எச்சரிக்கை!

பிரிட்டிஷ் பிரதமரின் 10 டவுனிங் வீதி அலுவலகம் அருகில் நேற்றுக் காலை பத்து மணியளவில் திடீரென மோட்டார் தாக்குதல் நடாத்தப்பட்டது. மூன்று மோட்டார் ஷெல்கள் பிரதமர் அலுவலகம் அருகில் வீழ்ந்து வெடித்தன. ஷெல்கள் வீழ்ந்து வெடித்த போது பிரதமர் அலுவலகத்தில் வளைகுடாப் போர் குறித்துப் பிரதமர் மேஜரும் ஏனைய அமைச்சர்களும் விவாதித்துக்கொண்டிருந்தனர். ஷெல்கள் வீழ்ந்து வெடிக்க ஆரம்பித்ததும் பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் அலுவலகத்தில் உள்ள விசேட பாதுகாப்பு அறை நோக்கி ஓடினர். பொலிஸாரின் தகவலின் படி பிரதமர் அலுவலகம் அருகில் உள்ள, ஏனைய அமைச்சரவை பிரிவுகள் இயங்கும் வைற் ஹோலில் இருந்தே மோட்டார் தாக்குதல் நடாத்தப்பட்டது. ஷெல் வீழ்ந்து வெடித்து பெரும் புகைமண்டலமாக இருந்தபோது இருவர் வானில் தப்பிச்சென்றதாக நேரில் கண்ட மக்கள் கூறியுள்ளனர். எனினும் தாக்குதல் குறித்து எவரும் உரிமை கோரவில்லை. தற்போது தாக்குதல் நடந்த பகுதி முற்றாக தடைசெய்யப்பட்ட பிராந்தியமாக பொலிஸார் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

### புஷ்ஷிற்கும் எச்சரிக்கை

அமெரிக்க ஜனாதிபதி புஷ் எப்படியும் ஈராக்கிய மக்களினால் பழிவாங்கப்படுவார் என சதாம் ஹுசைன் எச்சரித்துள்ளார். புஷ் பதவியில் இருந்து ஓய்வுபெற்றாலும் கூட பழிவாங்க ஈராக்கியர் தவற மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டார்.

### வான்தாக்குதல் குறித்து கருத்து வேறுபாடு

ஈராக்மீது அமெரிக்க நேச நாட்டுப்படைகளின் விமானத் தாக்குதல் பலன் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. பிரிட்டிஷ் அதிகாரிகளின் கருத்துப்படி வான் தாக்கு ஈராக்கின் கவசப்படைகளை அழிக்கவில்லை. அவர்களின் மனநிலையைகுழப்பவே முடிந்தது என கூறுகின்றனர். ஆனால் அமெரிக்க அதிகாரிகள் வான்தாக்கு ஈராக் கவசப்படையை பெருமளவில் அழித்துவிட்டது எனக் கூறுகின்றனர்.

### இப்படியும் திட்டம்?

தரைப்போர் முஸ்லிம்களின் நோன்பு காலமான மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படலாம் என சில மேற்குலக வட்டாரங்களில் கருதப்படுகிறதாம். நோன்பு காலங்களில் முஸ்லிம்கள் போரை கைவிட்டுநோன்புடன் தொழுகையிலேயே அதிகம் கவனம் செலுத்துவர். இச்சந்தர்ப்பம் தரைத்தாக்குதலை அமெரிக்க நேச அணிகள் ஆரம்பிக்க ஏதுவாகலாம் எனவும் கூறப்படுகிறது.

### வின்ஸ்கொன்ஸினும் தாக்குதல்

குவைத்தில்உள்ள ஈராக்கிய இலக்குகள் மீது அமெரிக்காவின் மற்றுமோர் கடற்படை கப்பல் யூ எஸ் எஸ். வின்ஸி கொன்ஸின் மிசூரியுடன் இணைந்து தாக்குதல்நடாத்தி வருகிறது. வின்ஸிகொன்ஸின் கொரியப்போரிலும் பங்கு பற்றிய கடற்படைகப்பலாகும்.

## 'போதைப்பொருள்களை ஒழிப்போம்'

"விடுதலைப் போராட்டம் நடைபெறும் இக்காலகட்டத்தில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் போதைப் பொருள் பாவனை பரவுவது அவர்களுடைய போராட்ட உணர்வை மழுங்கடித்து அவர்களை செயலிழக்கச் செய்துவிடும்." இது உலகெங்கும் அடக்குமுறை அரசுகளாலும் ஆக்கிரமிப்பாளர்களாலும் கைக்கொள்ளப்படும் ஒரு தந்திரோபாயமாகும்" இவ்வாறு போதைப் பொருள் ஒழிப்புத் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று உலகெங்கும் போதைப் பொருள் பாவனை ஒரு சமூகப்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பல நாடுகளில் போதைப் பொருள் பாவனை, விற்பனைக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

இந்திய இராணுவமும் தமிழீழத்தில் போதைப் பொருள் பாவனையை ஊக்குவதில் முயன்றது. ஆனால் மக்கள் விழிப்புணர்ச்சியினாலும், எமது தீவிரமான நடவடிக்கையாலும் அம் முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. இன்று போதைப்பொருள் புழக்கத்துக்கு சிங்கள இனவாத அரசு மறைமுகமாக உதவ முனைகிறது.

இந்த சமூக விரோதச் செயலில் ஈடுபடுவோரை இனம் கண்டு எமது விடுதலைப் போராட்டத்துக்கு பலம் சேர்ப்போம்" (71)

### யுத்தத்தில்...

போது அப்பாவிப் பொது மக்கள் பலியாவதை தாம் நேரில் கண்டதாக பி. பி. ஸி. நிருபர் மொறிஸ் குறிப்பிட்டபோதே அமைச்சர் ரஞ்சன் இவ்வாறு பதிலளித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளாவின் விஜயம் குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் அவரின் விஜயத்தின் மூலம் இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது போக்கில் மாற்றம் செய்யமாட்டாது. இது குறித்து நாம் பேசவும் இல்லை என்றார்.

### அஞ்சலி

மண் மீட்பிற்காகப் போராடித் தச்சன்காட்டில் வீரமரணமடைந்த 29 புலிகளுக்கும் வடமராட்சிப் பகுதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

### நியாயவிலையில்

வடமராட்சிப் பகுதியில் ஆங்காங்கே சீனி, சன்லைட், மாணவர்களுக்கான கொப்பிகள் என்பன நியாயவிலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (50)

### ஸ்ரீலங்காவின்...

இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராஜா (மாத்தையா) பி. பி. ஸி நிருபர் கிறிஸ் மொறிஸ்க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வளைகுடாப் போரில் உலககவனம் இருக்கும் இவ்வேளையில் ஸ்ரீ லங்கா விமானப் படை பொது மக்கள் இலக்குகளை தாக்கி அவர்களை கொன்று வருவதாகவும் திரு மகேந்திரராசா அப்பேட்டியில் சுட்டிக்காட்டினார்.

### நல்லூர்...

17-ம் திகதிகளிலும், பருத்தித்துறை பிரிவைச் சேர்ந்தோர் 18-ம் திகதியும் சிற்றூரவைகளினால் குறிப்பிடப்படும் இடங்களில் ஒதுக்கப்பட்ட நேரங்களில் தங்கள் பங்களிப்பைச் செலுத்திக் கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி அறிவித்துள்ளார்.

## 29 போராளிகளுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

தச்சன் காட்டுப்பகுதியில்வீரமரணமடைந்த 29 புலிப் போராளிகளினதும் புகழுடல்களுக்கு நேற்று பெருந்தொகையான மக்களும், பாடசாலை மாணவர்களும் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். சில பகுதிகளில் தோரணங்கள் வீதிகளில் கட்டப்பட்டிருந்தன.

வீரமரணமடைந்த வலிகாமம் பகுதி போராளிகளினது புகழுடல்கள் அரியாலைப் பகுதியிலும் தென்மராட்சி மற்றும் கிழக்கு மாகாண போராளிகளின் புகழுடல்கள் தென்மராட்சியிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. (71).

### ஹெலியில்—

மனைவி இராசம்மாவும் படுகாயமடைந்தனர். மற்றும் சட்டநாதர் ஆலய மண்டபத்தில் நின்ற ஒருவரும் காயமடைந்தார்.

திருநெல்வேலி கேணியடியில், கிரனைட் வீசப்பட்டதால் அச்சுவேலி க. கீதா(17), குமுதி (10), கஜேந்திரகுமார் (6) ஆகியோர் வீட்டில் இருந்த போது காயமடைந்தனர்.

(38, 50, 16, 12, ப11, ப14, 33, 71)

### சீனாவிலிருந்து ஆயுதங்கள்...

ரிப்புரி - 85 டாங்கிகளும், வை. டபிள்யூ 531 கவசவாகனங்களும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன. இவற்றுடன் விமானப்படையில் புதிதாகச் சேர்க்கப்படவுள்ள சீனாவின் ஏ-5 எம் விமானம் விரைவில் கொழும்பு வந்து சேரவுள்ளதாகவும் சீனாவில் இவ்விமானப்பயிற்சி பெற்ற விமானிகள் இங்கு வந்துசேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏ - 5 எம் விமானங்கள் இரண்டு தொன் ரொக்கெட்டுகளை கொண்டுசெல்லக் கூடியவையாகும்.

இவ்விமானங்கள் 50 கலிபர் குண்டுகளினால் சேதமடையாத உலோகத்தை கொண்டிருப்பதினாலேயே இவை தெரிவு செய்யப்பட்டதாக அப்பத்திரிகை கூறுகிறது.


## தவறிவிட்டது

MEDICAL RECORD BOOK

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவி செல்வி நிரஞ்ஜினி பாலசுப்பிரமணியம் அவர்களின் மருத்துவ பதிவுக்கொப்பி (சிவப்புநிற அட்டை கொண்டது) பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையிலோ, அல்லது ஆரியகுளம் சந்திக்கும் புகையிரதக் கடவைக்கும் இடையிலோ தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் ஆனைப்பந்தி டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்களிடம் ஒப்படைக்கவும் நன்றியுடன் சன்மானம் வழங்கப்படும்.

02053


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 08- 02- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.